| Headline | Kota Baru TNB manager charged with corruption, money- | | |
|---|---|---|---|
| MediaTitle | Makkal Osai | | |
| Date | 16 Oct 2016 | Language | Tamil |
| Circulation | 28,000 | Readership | 180,000 |
| Section | News | Page No | 7 |
| ArticleSize | 118 cm² | Journalist | NULL |
| PR Value | RM 1,201 | | |
| | | | |



# ஊழல், நிதி மோசடி கோத்தா பாரு டி.என்.பி. நிர்வாகி மீது குற்றச்சாட்டு



கோத்தா பாரு, அக். 16–

கோத்தா பாரு டி.என்.பி. நிறுவனத்தின் நிர்வாகி அர்மான் சே ஒஸ்மான் மீது ஊழல் புரிந்ததன் அடிப்படையிலும் 125,200 வெள்ளி பண மோசடியில் ஈடுபட்டதற்காகவும் 13 குற்றச்சாட்டுகள் நேற்று கோத்தா பாரு செஷன்ஸ் நீதிமன்றத்தில் குற்றஞ்சாட்டப்பட்டன.

இருப்பினும் 47 வயதான அர்மான் அந்தக் குற்றச்சாட்டுகளை மறுத்து விசாரணை கோரினார். அந்தக் குற்றச்சாட்டுகளில் 11 குற்றச்சாட்டுகள் 2009ஆம் ஆண்டு ஊழல் தடுப்பு ஆணையச் (எஸ்.பி.ஆர்.எம்.) சட்டத்தின் 17(ஏ) பிரிவின் கீழ் சுமத்தப்பட்டன. எஞ்சிய இரண்டு குற்றச்சாட்டுகள் நிதி மோசடி சட்டத்தின் கீழ் சுமத்தப்பட்டன.

டி.என்.பி. நிர்வாகி என்ற வகையில் குத்தகையாளர் ஒருவருக்கு திட்டங்களை வழங்குவதற்கு 61,000 வெள்ளி லஞ்சம் பெற்றதாக அர்மான் மீது குற்றஞ்சாட்டப்பட்டது. கடந்த 2013ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் தொடங்கி 2014ஆம் ஆண்டு ஜூலை மாதம் வரையில் கோத்தா பாருவிலும், தானா மேராவிலும் உள்ள பப்ளிக் பேங்க் வங்கியில் அந்த ஊழல் பணத்தைப் பெற்றதாக அவர் குற்றஞ்சாட்டப்பட்டார்.

வரும் நவம்பர் மாதம் 15ஆம் தேதி இந்த வழக்கு விசாரணைக்கு வரும் என்று குறிப்பிட்ட நீதிபதி நஸ்ரி இஸ்மாயில், 40,000 வெள்ளி தனிநபர் ஜாமீன் உத்தரவாதத்தில் அர்மான் விடுவிக்கப்பட அனுமதியளித்தார்.

Powered by: iSENTIA